[31st August 1959

* 16 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Works be pleased to state the stage at which the proposal to develop Tuticorin Port into a major port now stands and the details about the scheme?

THE HON. SRI P. KAKKAN : Sir, certain preliminary investigations like traffic survey and trial borings have been completed and the results are being studied by the Government of India. Pending finalisation of the scheme, it is too soon to say anything about the details of the scheme.

* 17 *Q.*—SRI N. S. RAMALINGAM (on behalf of SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்திலிருக்கும் எந்தெந்தத் துறைமுக அபிவிருத்தி வேலைகளைப் பற்றி 1959 மார்ச் மாதத்தில் சென்னை கோட்டையில் நடைபெற்ற மத்திய அரசாங்கத்தின் துறைமுக ஆலோசனைக் கமிட்டி மெம்பர்கள், சென்னை ராஜ்ய மந்திரிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆலோசனைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன ?

(ஆ) இவைகளுள் எந்தெந்தத் திட்டங்கள் இரண்டாவது, மூன்றுவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் நிறைவேற்றப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) The following items of works were discussed at the meeting :—

(i) Development of Tuticorin Port into a major harbour; and the

(ii) Development of Cuddalore and Nagapattinam ports.

(*b*) The report of the Intermediate Ports Development Committee is awaited.

SRI M. S. SELVARAJAN : ஸார், அமைச்சர் அவர்கள் இப்போது தெரிவித்திருக்கின்ற ஸ்டேட்மெண்டு பிரகாரம் அங்கு, தூத்துக்குடியில் "ட்ரையல் போரிங்" எல்லாம் முடிந்து பல மாதங்கள் ஆகின்றன. துறைமுக அபிவிருத்தி வேலையை இன்னும் இரண்டு வருடங்களுக்குள் முடிப்பதற்கு அரசாங்கமும் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிகிறது. இதற்காக இந்த வேலையைத் துரிதப்படுத்த அரசாங்கம் என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இந்த வேலையை வெகு துரிதமாக முடிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய ஆசையும், அவாவும். இதற்காக நேரிடவும் கடிதம் மூலமாகவும் மத்ய அரசாங்கத்தை அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். இதில் பாறைகளை உடைத்து எடுக்கும் விஷயத்திலும் மணலை வாரி எடுக்கின்ற விஷயத்திலும் எந்த விதமாண இயந்திரங்கள் உபயோகப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி யுனைடெட் கிங்டம், ஹாலண்ட் இந்த இடங்களில் ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கிறது. மேலும் இதற்கு வேண்டிய இயந்திரம் அமெரிக்காவிலுள்ள Mr. கிங்கர் சால் ராண்ட் கம்பெனியிடமிருந்து வரவேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவைகள் வந்து சேர்ந்தவுடன் வேலைகள் துரிதமாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், தூத்துக்குடி துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு போடப்பட்டிருக்கும் எஸ்டிமேட் தொகை என்ன? எவ்வளவு காலத்திற்கு எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.